**பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு**

# தேயிலை ஆராய்ச்சி சபை

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

# வெற்றிடம்

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**தொழில்நுட்பவியல் அதிகாரி (மின்னியல்)**

**Technological Officer (Elecrtical)**

**கடமை விபரம்:**

நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் வேலைகள் மற்றும் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், மின்சார வேலைகளுக்கு வசதியேற்படுத்துதல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத சிவில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி:**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MA 2-2 (2025) ரூபா 50,540/- 10 x 540 - 7 x 630 - 4 x 1,080 - 20 x 1,280 - ரூபா 90,270.00 (2027-01-01ஆம் திகதி முதல் அடிப்படைச் சம்பளம் 50,540.00 ரூபா வழங்கப்படும்) (2025-01-01ஆம் திகதியில் செலுத்தப்படும் சம்பளத் தொகை 43,379.00 மற்றும் செலுத்தப்படாத தொகை 7,161.00 ரூபாவாகும்)

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை :** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

பதவிகள் நிரந்தரமானவை. சகல சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் தொடர்பு விபரங்கள் சகிதம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். அனைத்து சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**ஏனைய நன்மைகள்:**

i. இருப்பிட வசதி (முழுமையாக தளபாடமிடப்பட்ட விடுதி) வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுப் படியொன்று வழங்கப்படும்.

ii. நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

iii. **சேமலாப நிதி:** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10% ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிறுவனமானது 15% செலுத்தும். மேலும் நிறுவனமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்புச் செய்யும்.

iv. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பதவிக்கு ஏற்புடையதான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2026 ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன் ''பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், சென் கூம்ஸ், தலவாக்கலை'' எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அந்த நிறுவனத் தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்டால் நியமனத்தைப் பெற்றுக்கொள்ள விடுவிக்கப்படுவார் என சான்றுபடுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**